**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO I, SATTUR**

Calendar )
)
Miscellaneous )
) Case No. CC.48/2025
Preliminary Register )
)
Sessions )

Deposition of witness for Prosecution pw1
Defence
Court

Name : திரு.காளிராஜ்(சிறப்பு சார்பு ஆய்வாளர்)

Father's Name :

Village :

Taluk :

Age :

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 மனுவானது இணையவழியாக பதிவேற்றம் செய்யப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

21.05.2026

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2024ம் ஆண்டு ஏழாயிரம்பண்ணை காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது 23.08.2024ம் தேதி 11.00 மணிக்கு வெம்பக்கோட்டை வட்ட காவல் நிலைய ஆய்வாளர் உத்தரவின் பேரில் ஏழாயிரம்பண்ணை சார்பு ஆய்வாளர் திரு.ஹரிராம் அவர்களுக்கு உதவியாக நானும், முதல்நிலை காவலர் 3861 திரு.மாரிமுத்து என்பவரும் கள்ள வெடி, கள்ள திரி குற்ற தடுப்பு சம்மந்தமாக ஏழாயிரம்பண்ணை சரகம், புல்லக்கவுண்டன்பட்டி, இந்திரா காலனியில் ரோந்து சுற்றி கண்காணித்து வரும் போது இந்திரா காலனி மேற்கு பக்கம் அசோக்குமார் என்பவருக்கு சொந்தமான பழைய மாட்டு பண்ணையில் கள்ள வெடி தயாரித்தது சம்மந்தமாக சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 11.30

மணிக்கு மேற்படி போலீஸ் பார்ட்டி சகிதம் அந்த இடத்திற்கு சென்று பார்க்க அங்கு பேன்சி வெடி தயாரித்து குழாயில் திரி வைத்து கொண்டிருந்தவர்கள் போலீஸ் பார்ட்டியை கண்டதும் ஓட எத்தணித்தவர்களை பிடித்து விசாரிக்க 4/59, கிழக்கு தெரு, காளிப்பன் மகன் அசோக்குமார், வயது 42 என்பவர் கள்ள வெடி தயாரிப்பதை ஒப்புக் கொண்டதால் அரசு அனுமதியில்லாமல் பேன்சி ரக கள்ள வெடி தயாரித்தால் மனித உயிருக்கு ஆபத்து ஏற்படும் என தெரிந்திருந்தும், தயாரித்த குற்றத்திற்காக மேற்படி நபரை சார்பு ஆய்வாளர் கைது செய்து மருந்து அடைக்காத திரி வைக்கப்பட்ட பேன்சி ரக இன்னர் குழாய் சில்கள் அடங்கிய சாக்கு பை ஒன்று, கம்பியூட்டர் திரி மூன்று கட்டும், திரி வெட்ட பயன்படும் கத்தி ஒன்று, 5 கிலோ வெடி உப்புகள் ஆகியவற்றை அத்தாட்சியில் பேரில் கைப்பற்றியும், அந்த அத்தாட்சியில் வெளி நபர்கள் யாரும் கையொப்பமிட முன்வாராதால் போலீஸ் பார்ட்டியாகிய நானும், முதல்நிலை காவலர் திரு. மாரிமுத்து என்பவரும் கையொப்பம் இட்டோம். என்னிடம் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான், சம்பவ இடத்தில் தயார் செய்த அத்தாட்சி இது தான். **அத்தாட்சியானது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படம் இவ்வழக்கு சொத்துக்கள் அடங்கிய புகைப்படம் தான். **அந்த புகைப்படம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

வாய்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.